# ஏப்ரல் – 14 – குருத்து ஞாயிறு

**ஆண்டவரின் திருப்பாடுகளின் புனித வார ஆரம்பம்**
**“நான் உங்களிடையே பணிவிடை புரிபவனாக இருக்கிறேன்” லூக்.22:27**

## முதல் வாசகம் : ஏசாயா 50 : 4 – 7

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என்தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பதுபோல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். ஆண்டவராகிய என்தலைவர் என்செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என்தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என்தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என்முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன்.

**பதில்பாடல் :** என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?.

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2 : 6 – 11

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர. தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக ”இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

## நற்செய்தி: லூக்கா 22 – 14 தொடக்கம் லூக்கா 23 – 56 முடிய

அக்காலத்தில் நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார். அப்போது அவர் அவர்களை நோக்கி, ”நான் துன்பங்கள் படுமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன். ..........................................................................................................................

..............அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் அவரது உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. அன்று ஆயத்த நாள் ஓய்வுநாளின் தொடக்கம். கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள் அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்துவிட்டு, திரும்பிப்போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

**தியானம்:** இன்று குருத்தோலை ஞாயிறு. யேசுவின் திருப்பாடுகளின் ஞாயிறு என்றும் அழைப்பார்கள். இயேசுவின் பாஸ்கா நிகழ்வு எருசலேமிற்குள் நுழைகின்ற போதே ஆரம்பமாகின்றது. உலகில் மனிதர்கள் பொதுவாக வாழவே பிறக்கின்றார்கள். ஆனால் இயேசு தன் வாழ்வை இழக்கவும் அதனைப் பிறருக்குக் கொடையாக வழங்கவும் வந்தார் என்பது இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பும் இறப்பும் நமக்குச் சொல்லும் உண்மை. “நாம் வாழ்வு பெறும்பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்” என்கிறார் யோவான் (1யோவா.4:9, யோவா.3:16). “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாக பெரும்பொருட்டு வந்துள்ளேன்” (யோவா.10:10) என்றார் இயேசு. மனிதருடைய கீழ்ப்படியாமை, ஆணவம், தற்பெருமை, பாவத்திற்கும் சாபத்திற்கும் அடிமைத்தனத்திற்கும், இறப்பிற்கும் வழியாக அமைந்தது. பாவம் செய்கிற எவரும் பாவத்திற்கு அடிமை. இந்த அடிமைத்தனத்திலிருந்து மனிதர்களை விடுவித்து அவர்களை மீண்டும் தன்னோடு ஒப்புரவாக்க கடவுளால் அனுப்பப்பட்டவர்தான் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து. “எல்லோருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர் ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளுக்கு இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர். இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகுமாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார்” (உரோ.3:22-25). இந்த மீட்புச் செயலை நிறைவேற்ற ஆண்டவர் இயேசு எருசலேமிற்குள் நுழைகின்றார். நாம் காலகாலமாக எதிர்பார்த்த தாவீதின் வழிவந்த மெசியா இதோ நம்மிடையே எழுந்துவிட்டார் என்ற நம்பிக்கை ஒளி தம் கண்களில் ஒளிர ஆர்ப்பரிப்போடும் ஆரவார முழக்கத்துடனும் இயேசுவைத் தம் நகரத்தின் கிழக்கு வாயிலின் முன் நின்று வரவேற்ற எருசலேம் வாழ் யூத மக்கள் அவரை எருசலேம் கோவில் நோக்கி மகிழ்ச்சி பொங்க அழைத்துச் சென்றனர். ‘வாழ்க’ என்று கூறி இயேசுவுக்குக் குருத்து ஞாயிறு அன்று கோஷம் எழுப்பிய எருசலேம் நகர மக்கள் கூட்டத்திற்கு ‘இயேசு ஒழிக’ என்று சொல்வதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படவில்லை. புனித வியாழன் மாலையில் எருசலேம் நகரில் உள்ள சீயோன் மலை உச்சியில் அமைந்த மேல்அறையில் தன் சீடர்களுக்குத் தன் உடலையும் இரத்தத்தையும் பாஸ்கா உணவாகத் தந்த இயேசு புனித வெள்ளி அன்று கல்வாரி மலைமுகட்டில் உலக மாந்தர் அனைவரின் பாவம் போக்கும் பலியாகத் தம்மையே எரிபலியாக்கி அவரில் நம்பிக்கை கொண்ட அனைவருக்குமான இரண்டாம் விடுதலைப் பயணத்திற்கான வாயிலைத் திறந்து வைத்தார். தம் உயிரைக்காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர் (மத்.10:39) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்கி நமக்கு வாழ்வைக் கொடுக்க தனது வாழ்வை இழக்க தயாராகின்றார்.